O.S. No: 87/2015

பெயர் : ராஜலெட்சுமி

**வா.சா.1**

04-09-2024

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் தாவா சொத்துக்களில் நாகராஜ படையாச்சிக்கு சொந்தமானது எது, பிரதிவாதிகளுக்கு சொந்தமானது எது, என்ன சொத்து யார் பெயரில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அவ்வாறு நான் பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 136 மொத்த விஸ்தீர்ணம் 4 ஏக்கர் என்றால் 3 ஏக்கர் 81 செண்ட் ஆகும். தாவாவில் 6 ஆம் பிரதிவாதி பெயரில் சர்வே நம்பர் 136 இல் வாங்கிய விஸ்தீர்ணம் காண்பிக்கப்பட்டுள்ளது. அதே சர்வே நம்பரில் நான் வாங்கிய விஸ்தீர்ணம் காட்டப்படவில்லை என்றால் கணவர் பெயரில் 1996 இல் வாங்கப்பட்ட சொத்தாகும். என் கணவர் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு 109/2015 ஐ அழகிரிசாமி மற்றும் கண்ணம்மாள் பெயரில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி . அந்த தாவா சொத்து விபரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள புல எண் 136 இல் கண்ட சொத்தையும் 6 ஆம் பிரதிவாதி வாங்கிவிட்டார் என்றால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்த பிறகு வாங்கிவிட்டார். அந்த சொத்தும் பூர்வீக சொத்தா என்றால் அது சின்ன தாத்தா சொத்து. எனக்கு விவசாயத்தில் எவ்வளவு வருமானம் வருகின்றது என்றால் அதை குறிப்பிட்டு சொல்ல முடியாது. 1000, 2000 ரூபாய் வரும். நடேச படையாச்சி எழுதி வைத்த உயிலை நான் ஏற்றுக்கொள்கிறேன். நடேச படையாச்சி எழுதி வைத்த உயிலை ஏற்றுக்கொள்ளும் நான், எனக்கு பாகம் குறைவாக கிடைக்கிறது என்பதால் நாகராஜ படையாச்சி எழுதி வைத்த உயிலை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. கிராமத்தில் ஒவ்வொரு நிலத்தையும் பெயர் சொல்லி அழைப்பார்கள் என்றால் சரி. துளுக்கம் பள்ளம் என்பது 4 ஏக்கர் என்றால் சரி. தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள 237/3 ஏ, 3 பி, 3 சி, 238/1 உள்ளடக்கியது தான் துளுக்கம் பள்ளம் என்றால் சரி . அந்த சொத்து நாகராஜ படையாச்சி சுயசம்பாதியத்தில் வாங்கிய சொத்து என்று நடேச படையாச்சி அவர் உயிலில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நடேச படையாச்சி பெயரில் உள்ள ஏதாவது சொத்து ஆவணத்தையாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். புல எண் 209/3 சி1, 209/3 சி2 ஆகிய சொத்துக்கள் திருவழஞ்சுழி கிராமத்தில் நடேச படையாச்சியால் அவருடைய தம்பி ராமசாமி

படையாச்சியிடம் கிரையம் வாங்கியது தாக்கல் செய்துள்ளேன் . அது இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டதா என்றால் சம்மந்தப்பட்டது . என் மகன் பரணி குமார் சென்னையில் வசிக்கிறார். அவர் 15 பிரதிவாதி நாவுக்கரசி என்பவரிடமிருந்து ஒரு சொத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம் . 16 பிரதிவாதி பிரவினுக்கு ஒரு சொத்தை விற்றுள்ளார் என்றால் ஆமாம் . இந்த வழக்கை நடத்துவதற்கு 2, 3 வாதிகளுக்கு விருப்பம் இல்லை என்றாலும் நான் தான் அவர்களை வர்புறுத்தி கையெழுத்து வாங்கி நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல . அவர்களை இந்நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்கிறேனா என்றால் அவர்களுக்கு உடல் நிலை சரியில்லாததால் நான் சாட்சியமளிக்கிறேன் . இந்த வழக்கில் ஆரம்பத்தில் இருந்து தாக்கல் செய்த மனுக்கள் அனைத்திலும் நான் தாக் கையெழுத்து செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம் . 2 ஆம் வாதி என் மூத்த சகோதரி . வழக்கில் அவர் பெயர் முதலில் போடாமல் என் பெயரை முதலில் போட்டதற்கு காரணம் என்னவென்றால் காரணம் எதுவுமில்லை . நாகராஜபடையாச்சி உயிலில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை வாதிகளும் பிரதிவாதிகளும் பிரித்துக்கொண்ட போது நான் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்றால் வாதிகள் மூன்று பேரும் ஒத்துக்கொள்ளவில்லை. நாங்கள் எதிர்ப்பு தெரிவித்ததற்கு ஏதாவது ஆதாரம் உள்ளதா என்றால் வாய் மொழியாக எதிர்ப்பு தெரிவித்திருந்தார். நாகராஜபடையாச்சி இறக்கும் வரை வாதிகள் மீது பாசத்தோடும் அன்போடும் இருந்தார் என்றால் ஆமாம். அவர் உயிருடன் இருக்கும் போது அவர் மீது வழக்கு போட்டேன் , புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. எனக்கும் 4, 6 பிரதிவாதிக்கும் இடையே எப்பேதில் இருந்து பேச்சு வார்த்தை இல்லை என்றால் என் அப்பா இறக்கும் வரை பேச்சு வார்த்தை இருந்தது. நாகராஜபடையாச்சி இறப்பதற்கு முன்பு 4 பிரதிவாதி மீது புகார் கொடுத்தேனா என்றால் பாதுகாப்பிற்காக கொடுத்தேன் . நடேச படையாச்சி பாகப்பிரிவினை செய்த பிறகு இந்து கூட்டுகுடும்பம் தொடர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நடேச படையாச்சி தனிப்பட்ட சொத்து என்ற முறையில் தான் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. நாகராஜபடையாச்சி தனிப்பட்ட முறையில் சுயமாக சம்பாதித்த சொத்துக்களை அவர் விருப்பப்படி உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. தந்தையிடமிருந்து சில சொத்துக்களை பெற்ற பிறகு 6 ஆம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்ற சொத்துக்களையும் நான் பொது குடும்ப சொத்துக்களாக காண்பித்துள்ளது தவறு என்றால் சரியல்ல . இந்து வாரிசு உரிமை சட்ட திருத்தம் 2005 இன்படி எனக்கு எந்த உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நாகராஜ படையாச்சி சினிமா தியேட்டர்,

அரசியல், ரைஸ் மில், மர மில், கள்ளுகடை, விவசாயம், பிளாஸ்டிக் மில் ஆகிய தொழில்கள் மூலம் வெவ்வேறு காலக்கட்டங்களில் ஈட்டி சொத்துக்களை எந்தவித ஆதாரமும் இன்றி பூர்விக சொத்துக்கள் என்று சொல்லி தாக்கல் செய்துள்ள இந்த தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல . தனிப்பட்ட முறையில் சம்பாதித்த சொத்துக்கள் சொந்த முயற்சியாலும் உழைப்பாலும் ஈட்டப்பட்ட சொத்துக்கள் என்று தெரிந்தும் , பிரதிவாதிகளை துன்புறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . நாகராஜ படையாச்சிக்கு சம்மந்தமே இல்லாத சொத்துக்கள் , பிரதிவாதிகளால் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் வழக்கில் தாவா சொத்துக்களாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . என்னால் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் சிலவற்றில் பிரதிவாதிகள் அவர்கள் சொந்த உழைப்பினால் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . நான் அதை தெரிந்தே மறுக்கிறேன் என்றால் சரியல்ல . நாகராஜ படையாச்சி எழுதி வைத்த உயில் அமுலுக்கு வந்தபடியால், உயிலின் படி வாதிகளும், பிரதிவாதிகளும் நாகராஜபடையாச்சி இறந்த பிறகு சொத்துக்களை அடைந்து அனுபவித்து வருவதால் தாவா சொத்துக்கள் பாகப்பிரிவினைக்கு உகந்தது அல்ல என்றால் சரியல்ல.

**7 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் 7 ஆம் பிரதிவாதி ஹேமலதா என் தகப்பனாருக்கும் அவருடைய இரண்டாவது மனைவி சந்திரா என்பவருக்கும் பிறந்தவர் என்றால் ஆமாம். என் தகப்பனார் எழுதி வைத்த உயிலை மறுத்து தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம் . உயலில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள், சர்வே நம்பர்கள் அனைத்தையும் இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை . சில சொத்துக்கள் என் அப்பா பெயரில் பட்டாவே , உரிமையில்லாத சொத்துக்களை காட்டவில்லை . சர்வே நம்பர் 132/4, 132/5 ஆகியவை சேர்க்கப்படவில்லை . சர்வே நம்பர் 132/2 என் தாய் வழி தாத்தா என் பெயரில் எழுதி வைத்தது . சர்வே நம்பர் 132/4, 132/5 ம் என் அப்பா பணம் கொடுத்து கிரயம் வாங்கவில்லை . அதனால் சேர்க்கவில்லை . இந்த விவரங்கள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு தெரியும் . இந்த விவரங்களை நான் வழக்குரையில் சொல்லவில்லை. எனக்கு இரண்டு மகன்கள் பரணிகுமார் , மகேஷ் குமார். சர்வே நம்பர் 149 இல் ஒரு ரைஸ் மில் என் அப்பா பெயரில் இருந்ததா என்றால் இல்லை. இடம் என் அம்மா பெயரில் இருந்தது . ரைஸ் மில் நடத்தியது என் அண்ணன் சுவாமிநாதன் . அது பூர்வீக சொத்து அல்ல . அது என் அம்மா வழியில்

வந்தது. என் தந்தை எழுதி வைத்த உயில் படி அவரவர் சொத்தை அவரவர் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. உயிலில் கண்டுள்ள சொத்துக்களில் சிலவற்றை நான் சேர்க்காததால் இந்த பாகப்பிரிவினை வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. என் தந்தை நாகராஜ படையாச்சிக்கு மூதாதையர் சொத்து என்று சட்டப்படி எதுவும் கிடையாது என்றால் சரியல்ல . அவருடைய தனிப்பட்ட சொத்தை அவர் உயில் எழுதி வைத்துள்ளதால் இந்த பாக வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல . என் தந்தையின் 2 வது மனைவியின் குழந்தைகளை வஞ்சிக்கும் பொறுட்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.